**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.4/2024 அதன் அ.வ.எண்.313/2024**

திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், கோடகநல்லூர் ஊராட்சி, நடுக்கல்லூர் கிராமம், சேரன்மகாதேவி ரோடு, மெயின் ரோடு, பேட்டை வழி, கதவு எண்.1/227 உள்ள மஜ்ஜிதே முகம்மதியார் ஜும் ஆ பள்ளிவாசலின் அதன் தலைவர் மற்றும் தர்மகர்த்தாவான சாகுல் ஹமீது அவர்களின் பொது அதிகாரம் பெற்ற முகவரான மேற்படி முகவரியில் குடியிருந்து வரும் முஸ்லீம், உள்ள சிந்தாமதார்.

... மனுதாரர் /வாதி

–எதிர்–

திருநெல்வேலி தாலுகா, கோடகநல்லூர் கிராமம், நடுக்கல்லூர், ரயில்வே பீடர் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து வரும் சுடலைமுத்து தேவர் அவர்களின் குமாரர், இந்து, வயது 57 உள்ள குட்டிசாமி.

... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது, மனு தபசில் சொத்துக்களை தாலுகா நில அளவையருடன் பார்வை செய்து, அளந்து அதன் தன்மைகள், அளவுகள், எல்கைகள் குறித்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர்/அட்வகேட் ஒருவரை நியமனம் செய்ய உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151 சி.பி.சி ன் படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள்; 05.08.2024, 07.08.2024, 12.08.2024

இம்மனு என்முன்பாக 30.01.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.முகம்மது உசேன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வெங்கடேஷ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும்,

ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவாணை**

1) இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) செலவு தொகை இல்லை.

**1வது தபசில்**

திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி வட்டம், கோடகநல்லூர் கிராமம், புல எண்.761/35 பழைய புல எண்.704/1B 0.13.50 ஹெக்டேர் ஏர் உள்ள தபசிலில்,

வடக்கே – காதர்மஸ்தான் காலியிடம், நாராயணபிள்ளை வீடு மற்றும் பொதுபாதை

தெற்கே – சேரன்மகாதேவி மெயின் ரோடு

மேற்கே – தென்வடல் ரோடு

கிழக்கே – பொது முடுக்கு அதன் அடுத்து கோடகநல்லூர் பஞ்சாயத்து அலுவலகம்

**2வது தபசில்**

1) திருநெல்வேலி பதிவு மாவட்டம், பேட்டை சப்டி சரகம், கோடகநல்லூர் கிராமம் சரகம், நடுக்கல்லூர், மேற்படி கிராம பஞ்சாயத்து 1வது வார்டு ரயில்வே பீடர் ரோட்டில் (வாட்டர் டேங்க் தெருவில்) தெற்கடைய உள்ள காலி மனைக்கு எல்கை.

தெற்கே – காலியிடம்

மேற்கே – தென்வடல் ரோடு

வடக்கே – 2 லக்க சொத்து மற்றும் இசக்கி மனை

தெற்கே – கிழமேல் தெரு

இந்த நான்கு எல்கைக்குட்பட்ட கிழமேல் அடி 33, தென்வடல் அடி 66–க்கு சதுரடி 2178–க்கு சதுர மீட்டர் 202.34113 அளவுள்ள காலி மனை.

2) மேற்படி பதிவு மாவட்டம், மேற்படி சப்டி சரகம், மேற்படி கிராமம், மேற்படி

வார்டு, மேற்படி தெருவில் வடக்கடைய காலி மனைக்கு எல்கை.

கிழக்கே – நாச்சியார் மனை மற்றும் இசக்கி மனை

மேற்கே – தென்வடல் ரோடு

வடக்கே – கிழமேல் தெரு

தெற்கே – இதன் 1 லக்க சொத்து

இந்த நான்கு எல்கைக்குட்பட்ட கிழமேல் அடி 35.68 தென்வடல் மேல்தலை அடி 61.38, தென்வடல் கீழ்தலை அடி 60.72–க்கு சதுரடி 2178.264–க்கு சதுர மீட்டர் 202.36566 அளவுள்ள காலி மனையும் தபசில் விபரம் சரி. மேற்படி சொத்துக்கள் மேற்படி கிராமம் நத்தம் சர்வே 704/1பி–யில் உள்ளது. மனைவாரி பட்டா படி புதிய புல எண்.761/29 மற்றும் 761/30–ல் உள்ளது.

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07ம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

Decree uploaded on 24.02.2026.

MARIMUTHU R MUNIYASAMY

Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.24 15:22:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.4/2024 அதன்</u>**
**<u>அ.வ.எண்.313/2024</u>**

உத்தரவாணை
07.02.2026.